விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 03 வெள்ளிக்கிழமை (20.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 296

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள்

# அரசுக்கான இறுதிச் சந்தர்ப்பமே!

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறப் போகும் பேச்சுக்கள் இறுதிச் சந்தர்ப்பமே. இச் சந்தர்ப்பத்தை தமிழ் மக்களும் தமிழ் மக்களுடைய தலைமையும் சர்வதேச சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

எனவே சர்வதேச சமூகம் இதில் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் அவலங்களை, பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துக்கு தெரியப் படுத்துகின்ற ஒரு அரங்காகவே தாம் பயன்படுத்தவுள்ளதாக அவர் கூறினார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## மீன் வியாபாரி சுட்டுக்கொலை

(துன்னாலை)

கரவெட்டி சம்பந்தர் கடையடியில் வைத்து மீன் வியாபாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கந்தன் உதயகுமார் (வயது 37) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நெல்லியடி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டு வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்த போது பிற்பகல் 3 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணையின் பொருட்டு அவரது சடலம் மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-10)

## சண்டிலிப்பாயில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாயில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டாரென தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுதன் (வயது 32) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவரென அடையாளம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் வைத்து நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் இளைஞன் ஒருவர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் தொலைத் தொடர்பகம் ஒன்றில் பணிபுரியும் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த துரைசிங்கம் தவச்செல்வம் (வயது 30) என்பவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை குறித்து புதிய முடிவுகள் இல்லை

### பெளயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைக்கு செல்வது குறித்து ஏற்கனவே வழங்கிய உறுதிப்பாட்டிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளனர் என இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்த பின்னர் பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது போன்றே அரசாங்கம் தமது உறுதிப்பாட்டினைத் தெரிவித்துள்ளது. சில நடைமுறை விடயங்கள் குறித்து பேசியாக வேண்டுமானால் பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கான உறுதிப்பாடு அப்படியே உள்ளதாகவும் பெள்யர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று தினங்களாக இரு தரப்பினரும் நடாத்திய பேச்சுவார்த்தைகளிலிருந்து இம் மாதம் 28 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளிற்கு இரு தரப்பும் வருவார்கள் என தாம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை நிறுத்தி போரை தொடருமாறு ஜே.வி.பி., ஹெல உறுமய கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம் -போரைத் தொடருங்கள் என்று மகிந்தவின் கூட்டுக் கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவை வலியுறுத்தியுள்ளன.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஜே. வி.பியின் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு மேசைக்குவரத் தயாராக இல்லை, பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர்கள் விரும்பவில்லை.

அவர்களது நடவடிக்கைகள் அனைத்தும் போரை விரும்புவதாக தெரிகிறது. இந்த வாரத்தில் வடக்கு -கிழக்கில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தவில்லை ஹபரனை மற்றும் காலி போன்ற இடங்களில்தான் தாக்குதல் நடத்தியுள்னர்.

முக்கிய இராணுவ நிலைகள் மற்றும் பொருளாதார மையங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். வடக்கு -கிழக்கு இணைப்புக்கு எதிரான உச்ச நீதிமன்ற தீர்ப்பானது பிரிவினை வாதத்துக்கு பாரிய தோல்வியாகும். முஸ்லிம் தலைவரான அஸ்ரப் போன்றோர் வடக்கு -கிழக்குப் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் தற்போதைய முஸ்லிம் தலைவர்கள் அதனை விரும்பவில்லை ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களை அரசாங்கம் கைவிட வேண்டும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (எ-5)

## விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் சமாதானப் பேச்சை பாதிக்காது

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பாதிக்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் இடம்பெறும் போது விடுதலைப்புலிகள் கொள்கைகள் மாறாத வகையில் செயற்படுவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர் பௌச்சருடனான சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீர்வொன்றைக் காணும்வரை விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டிய (04 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நல்லூர் பிரதேச சபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் முகமாக டெங்கு நுளம்புகளை அழிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் பிரகாரம் முதல் கட்டமாக யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள கொக்குவில் பகுதியில் டெங்குக்காய்ச்சல் ஆரம்ப குறிகள் தென்படுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தமையைத் தொடர்ந்து அப்பகுதியில் கடந்த வாரம் மலத்தியோன் மூலம் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் இச் செயற்பாட்டுக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஏ)



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஊடக இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் தலைமையில் இடம்பெற்றபோது...

## உயர் தொழில் நுட்ப நிறுவன வருடாந்த இறுதிப் பரீட்சை

உயர் தொழில்நுட்ப நிறுவன வருட இறுதிப் பரீட்சை முறையின் கீழ் நடைபெறும் பரீட்சைகளை(பருவகாலமுறைக்கு முன்) கடைசியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நெறிகளின் இறுதிப் பரீட்சைகளுக்கு தோற்றி சித்தியடையாத, குறைவான சித்தியடைந்த மாணவர்கள் நிறுவனத்திற்கு சமுகமளித்து பரீட்சை விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் திரு.வே.கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய உயர் கணக்காளர் டிப்ளோமா I, II, III,IV,உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா I,II,III,IV, வியாபார கல்வி தேசிய டிப்ளோமாII, வியாபார நிதி தொடர்பான தேசிய டிப்ளோமாII. (ச)

## ஸ்ரான்லி வீதியூடான போக்குவரத்துக்கு தடை

யாழ்.நகரப் பகுதியின் வேம்படிச் சந்தியிலிருந்து ஆரியகுளச் சந்தி வரையான பருத்தித்துறை வீதியும் ஆரியகுளச்சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி வரையான ஸ்ரான்லி வீதி நேற்று முன்தினம் முதல் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

அவ் வீதிகளில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்லத் தடை என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அட்டைகளுடன் வீதித் தடை போடப்பட்டுள்ளது.

அவ் வீதியூடாக யாழ்.நகருக்கு நுழையும் ஏனைய பிரதேசங்களுக்கு செல்லும் வாகனங்களும் அரச மற்றும் தனியார் பஸ் வண்டிகளும் மாற்றுப் பாதையூடாகவே நகரினுள் பிரவேசித்து வெளியேறுகின்றனர்.

பருத்தித்துறை, அச்சுவேலியில் இருந்து யாழ்.நோக்கி பயணிக்கும் பேருந்துகள் ஆரியகுளச்சந்தியினை வந்தடைந்து இராசாவின் தோட்ட வீதியூடாக பிரதான வீதிவழியே நகரினை வந்தடைகின்றது.

இதேவேளை கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதியூடாகவும் பருத்தித்துறைக்கும் அச்சுவேலிக்குமான போக்குவரத்துச் சேவை இடம் பெற்று வருகின்றது. மாதகல் மற்றும் காரைநகர் பஸ் வண்டிகளும் கஸ்தூரியார் வீதியூடாக போக்குவரத்தை மேற்கொண்டு வருவதனால் இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலையில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-133)

## அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க தமிழ்க் கூட்டமைப்பு காலக்கெடு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நவம்பர் 7 ஆம்திகதிக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலக்கெடு விதித்துள்ளது.

நேற்றுப் பாராளுமன்றம் கூடியபோது கைகளில் கறுப்புப்பட்டிகளைக் கட்டியவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நுழைந்தனர்.

வடக்குக் கிழக்கு இணைப்பை சட்டவிரோதமானது என நீதிமன்றம் தெரிவித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. எழுந்து அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் ஐக்கிய இலங்கைக் கட்டமைப்புக்குள் தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கான சந்தர்ப்பத்திற்கு முட்டுக்கட்டையாக வடக்குக் கிழக்கு மாகாணம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புள்ளது.

இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் எனவும் அதுவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றத்தை புறக்கணிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

# மோதல்களை நிறுத்துவதற்கு தெற்கில் ஒற்றுமை தேவை

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

வடக்குக் கிழக்கில் இடம்பெறும் மோதல்களை நிறுத்துவதற்கான ஒரேவழி தென் பகுதியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே என அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ள இச் சந்தர்ப்பத்தில் நாட்டின் இரு பிரதான கட்சிகளும் இணக்கப்பாட்டிற்கு வருவது சிறந்ததொரு முடிபென அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை நேற்றுச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கை தொடர்பாகவும் ரணில் விக்கரமசிங்க தெளிவுபடுத்தினார்.

ரணில் விக்கிரமசிங்க நேற்றுகண்டி மல்வத்த பீடாதிபதி சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ச)

## தீபாவளி விசேட வைப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தீபாவளித் தினமான நாளை யாழ்.பிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் யாவும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விசேட வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்காக காலை 9மணி தொடக்கம் 12 மணி வரை திறந்திருக்கும் என மக்கள் வங்கியின் உதவிப் பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் கணக்குகளை புதிதாக திறப்பவர்களுக்கும் ஏற்கனவே உள்ள கணக்குகளுக்கும் ரூபா ஐயாயிரத்தை வைப்பிலிடும் பொழுது ஓர் அழகிய பித்தளைத் தட்டு அன்பளிப்பாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ச)

## நடிகை ஸ்ரீவித்யா நேற்று காலமானார்

(சென்னை)



பிரபல நடிகைஸ்ரீவித்யா நேற்றிரவு தனது 53-வது வயதில் காலமானார். பிரபல பின்னணிப்பாடகி எம்.எல். வசந்தகுமாரியின் மகளும் தமிழ்த் திரைப்பட நடிகையுமான இவர் மலையாளத் திரையுலகிலும் புகழ் பெற்றவர்.

தனது 13-வது வயதில் திருவருட் செல்வர் படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமானார்.

எனினும் அபூர்வராகங்கள் படத்தின் மூலம் பிரபல்யமானார். முன்னணி நடிகர்களான கமல், ரஜினி போன்றோருக்கு இவர் தாயாராக நடித்துள்ளார்.

இதுவரையும் இவர் 900ற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புற்றுநோய் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஸ்ரீவித்யா திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக உயிரிழந்ததாகவும் தமிழ் நாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன. (ச-5)

## காலித்துறைமுகத்தில் நேற்று 4 சடலங்கள் கரை ஒதுங்கின

(கொழும்பு)

காலித்துறைமுகத்தினுள் புகுந்து கடற்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தியபோது உயிரிழந்த விடுதலைப்புலிகளின் 4 சடலங்களை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நான்கு சடலங்களும் கரையொதுங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தென்பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த காமகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் காலித்துறைமுகம் மீதான தாக்குதலையடுத்து அப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது 31 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் 20 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை காலித்துறைமுகம் மீதான தாக்குதலுக்கு அப் பகுதி மீனவர்கள் உதவினார்களா? என்பது குறித்து விசாரணை நடாத்த பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தலைமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலத்தில் க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் கா.குமாரவேலு தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஏ.இராசேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

# ஆட்டோச் சாரதிகளான மூவர் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் இளம்குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவன்கோவிலடி சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா காண்டீபன் (வயது-26) என்பவரே காணவில்லை என அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.50 மணியளவில் ஆட்டோ வாடகைக்கு அமர்த்திய பெண் ஒருவர் இவரை அழைத்துச்சென்றுள்ளார். அப்போது இவர்களை கனகம்புளியடியில் இராணுவத்தினர் மறித்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும் பின்னர் இவர் காணாமல் போயுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது ஆட்டோ கப்பூதுவெளி பற்றைக்குள் எதுவித சேதமுமின்றி இலக்கத் தகடுகளை மறைத்து சிங்களத்தில் எழுதிய கடதாசி ஒட்டப்பட்டிருந்ததாகவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீர்வேலி வடக்கில் அயலவர்களான இரு ஆட்டோ சாரதிகளை இனந்தெரியாத ஆயுததாரிகள் கடத்தி சென்றுள்ளதாக உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்இவர்கள் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடத்தப்பட்டவர்கள் இரு பிள்ளைகளின் தந்தையான கந்தையா யாசுதாஸன் (வயது-24) நள்ளிரவு 12.15 மணியளவிலும் அயலவரான அச்சுதன் வைகுந்தன் (வயது-22) என்பவரை 12.35க்கும் இனந்தெரியாத ஆயுததாரிகள் கடத்தி சென்றதாக அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-1,5)

இதயம் இல்லாதவனுக்கு கால்களாவது இருக்க வேண்டும்.

-அப்துர்-றஹூம்

வலம்புரி

# பொருள் தட்டுப்பாடு நிவர்த்தியாவது எப்போது?

ஏ-9பாதை தடைப்பட்டதிலிருந்து குடாநாட்டில் சகல பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

உணவுப் பண்டங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைப்பாட்டிற்கான பொருள்கள், கட்டடப் பொருள்கள், எரிபொருள்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் என எல்லாமே கிடைத்தற்கரியனவாகிவிட்டன.

அதேநேரம் கறுப்புச் சந்தையில் பொருள்களின் விலைகள் ஐந்து, ஆறு மடங்கு அதிகமாக விற்கப்படுகின்றன.

உள்ளி, இஞ்சி போன்றவற்றின் விலை அதிகரிப்பை அளவிடுவதற்குப் புதிய அளவீட்டுப் பரிமாணம் கண்டறிய வேண்டியதாகவுள்ளது.

அந்தளவிற்கு அவற்றின் விலையேற்றம் இமயத்திற்கு உயர்ந்து விட்டது.

இவ்விதம் பொருள்களின் விலை அதிகரிப்பு, பொருள்தட்டுப்பாடு என்பவற்றினூடே கட்டடப் பொருள்களின் கிடைப்பனவில் இருக்கக் கூடிய இட்டல் இடைஞ்சல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் சீவனோபாயம் எங்ஙனம் இருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் சிந்தித்தாக வேண்டும்.

நான்கு, ஐந்து மணித்தியாலங்கள் காத்து நின்று நூறு கிராம் உள்ளிப்பூடு வேண்டி என்ன செய்ய முடியும்?

காத்து நின்ற உடல் உபாதைக்கு இரசம் வைத்துக் குடிக்கலாம். இதை விட வேறு என்னதான் செய்ய முடியும்?

நூறு கிராம் உள்ளி, அரை லீற்றர் தேங்காய் எண்ணெய், நூறு கிராம் வெல்லம் பங்கீடு கனகச்சிதமாக நடக்கின்றது. இதனைக் கொண்டு வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற முடியுமா?

குடும்பத்திற்கு ஒரு பால்மாப் பைக்கற் என்று நிபந்தனை விதித்தால், வயது வேறுபாடின்றி ஏதாவது பால்மா பைக்கற் கொடுத்தால் போதும் என்று சங்கக்கிளை முகாமையாளர்கள் முடிவெடுக்கின்றார்கள்.

வயதுபோனவர்களுக்கும் லக்டோஜன்-2 வழங்கப்படுகின்றது. ஆறுமாதத்திற்கு மேல் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் லக்டோஜன்-2ஐ முதியவர்களுக்கு கொடுப்பதேன்?

அவர்கள் தமது குழந்தைப் பராயத்தில் லக்டோஜன் குடிக்காததன் குறையை நிவர்த்தி செய்வதற்கா? சங்கக்கிளை முகாமையாளர்களும் தமக்குள் ஓர் பொருத்தமான-நியாயமான பங்கீட்டு முறையைக் கடைப்பிடித்தால் லக்டோஜன் கிடைக்க வேண்டியவர்களுக்கு 'ஹைலன்ட்'டும், ஹைலன்ட் கிடைக்க வேண்டியவர்களுக்கு லக்டோஜனும் கிடைக்கும். உள்ளகத் தவறை நிவர்த்தி செய்யலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொருள் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்வது அரசின் தலையாய கடமையாகும்.

நிலை இவ்விதம் நீடிக்குமாயின் வறுமை தலைவிரித்தாடுவதும் போசாக்கின்மை மக்களை வாட்டுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

# 2005 ஆம் ஆண்டு கலைப் பிரிவின் பட்டப் படிப்பு முடிவுகள் வெளியாகின

(நேற்றைய தொடர்ச்சி...)

**புவியியல்**

**இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு)**

கே.அனுசயா, ஆர்.பாலமுரளி, ஏ.பிரதீபா, எம்.லதா, எஸ்.கஜேந்தினி,கே.கஜேந்தினி, கே.நிகிந்தினி, எஸ்.பிரபாகரன், என்.பிரதீபராஜா,ரி.ரஜினி, ஆர்.ஸ்ரானிஸ்குமாரி, எஸ்.சுரஸ்யா, என்.வாசுமதி, எஸ்.மகிந்தன், பி.சியாமகிருஷ்ணா, எஸ்.வாசுகி, எம்.மாலினி, ரி.செளந்தரினி,வி.லூடிஸ்மரியா யாழினி.

**இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு)**

ஜ.அன்ரேநெற் செலஸ்ரீனா, ஆர்.அனுசா , எஸ்.கவிநாயகி, ரி.கிருபாதாரணி, வி.கிருபாகரன், எம்.மதிமேகலா, ரி.மீரா, எஸ்.மிகாயா தர்ஷினி, வி.சந்தானலட்சுமி, எஸ்.சிவசிறீஸ்கன், ஏ.சுபத்திரா, கே.சுதர்ஷன், ஏ.சுதர்ஷினி, ஏ.துஷாகரன், எம்.விக்னேஸ்வரி, எஸ்.அழகோவியம்,கி.டொன்ஜோச் பிராங்கின், எஸ்.சுபாகரன்,எஸ்.சாமினி, வி.யூதீஸ், எம்.ஜெயபிரகாஷ், வி.சசிகரன், பி.சகுந்தலாதேவி,ரி.மேரிரதி, கே.யசோதா, எஸ்.கிருஷ்ணா.

**இந்துநாகரிகம்**

**முதலாம் வகுப்பு**

ஆர்.விஜிதா .

**இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு)**

கே.அஜந்தினி, கே.ஜெயா , கே.கலிமதி,எஸ்.புலமினா , வை.சங்கீதா , எஸ்.சோபா, வி.சிவகரன்,எஸ்.சுகந்தினி, கே.சுலோச்சனா , பி.தர்ஷினி, வி.விஜிதா , கி.அமலதாஸ், பி.யசோதா , எஸ்.சங்கீதா, ஏ.சதீஸ்வரி, எஸ்.சிவதர்ஷினி,என்.சியாமினி, எஸ்.சிவகுமார்,எஸ்.சிறிஜெயலட்சுமி, எஸ்.தாரணி , கி.தயாளினி, ஆர்.விஜிதா ,எம்.விஜயநந்தினி, எஸ்.சாமினி, எஸ்.ஜசுந்தி,என்.முரளிதரன்,எஸ்.தமயந்தி, பி.சோபிதா.

**இரண்டாம் பிரிவு (கீழ்ப்பிரிவு)**

ஏ.சோபனா ,எம்.பவானி,எஸ்.பிரிந்தா , ரி.ஜெயகுமார், ரி.கோகிலா ,பி.உமையவேல், ஆர்.கலைமதி. (தொடரும்)

# பொருள் விநியோகக் குறைபாடுகளுக்கு பிரதேச செயலகமே முக்கிய காரணம்

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பொருள்கள் வழங்கும்போது தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பிரதேச செயலகமும் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களும் சமுர்த்தி அலுவலர்களும் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒவ்வொரு பாவனையாளர்களும் ஏதோ ஒரு கிளை நிலையத்திற்கு உரியவர்கள். ஆனால் தற்போது அவர்களின் பங்கீட்டு அட்டை ஒரு கிளை நிலையத்தில் இருக்கின்ற போது வெவ்வேறு விநியோகத்திற்கான பொருள்களைப் பெறுவதற்கு வெவ்வேறு கிளைக்குப் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கான முழுப்பொறுப்பையும் பிரதேச செயலகமும் அந்தந்த பகுதி கிராம சேவையாளர்களும் சமுர்த்தி அலுவலர்களும்தான் ஏற்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகளால் கிளைகளின் நுகர்வோர் எண்ணிக்கை அடிக்கடி மாறுகின்றது. இதன் காரணமாக சங்கங்கள் கிளைகளுக்குப் பொருள்களை அனுப்புவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

கிளைகளுக்கான பொருள்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கின்ற போது சில கிளைகளுக்கு தேவைக்கு அதிகமாகவும் அதேசமயம் சில கிளைகளுக்கு தேவைக்குப் போதாத நிலைகளிலும் பொருள்கள் அனுப்ப வேண்டிய நிலைமைகளும் உருவாகின்றன. பின்னர் மீண்டும் பொருள் மாற்றம் செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படுகின்றது.

இதனால் பாவனையாளர்கள் வீணாக அலைக்களிக்கப்படுகின்றார்கள். குறித்த ஒருபொருள் கொள்வனவிற்காக இரண்டு மூன்று தடவைகள் கிளைகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

அதேபோன்று இரண்டு மூன்று கிளைகளுக்கு இடமாறி செல்ல வேண்டிய நிலைகளுக்கும் தள்ளப்படுகின்றார்கள். மேலும், எமது சங்கம் யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பாவனையாளர்களுக்கானது. இப் பாவனையாளர்கள் முழுமையாக யாழ்.பிரதேச செயலர் பிரிவையும் ஒரு பகுதி நல்லூர் பிரதேச செயலர் பிரிவையும் கொண்டுள்ளார்கள்.

பாவனையாளர்களின் கிளை மாற்றங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற வரை அதிகபட்சமாக கிளை நிலைய மாற்றங்களே ஏற்படுகின்றன.

ஆனால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கின்ற போது யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற எல்லைக் கோட்டைத் தாண்டி நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள்ளும் போக வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால் இவர்களுக்கான விநியோகம் இரு சங்கங்களினாலும் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளும்ஏற்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ச-133)

# கடற்படைக்குப் பயிற்சியளிக்க அமெரிக்கக் கடற்படை வருகை

## கொழும்பு ஊடகம் தகவல்

காலித் துறைமுகக் கடற்படைத் தளம் மீதான தாக்குதலையடுத்து இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சியளிப்பதற்காக ஆயிரம் அமெரிக்கக் கடற்படையினர் வரவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தி வருமாறு;

முன் எப்போதுமில்லாத அமெரிக்க-இலங்கை கூட்டு இராணுவ நடவடிக்கை விரைவில் தென்பகுதியில் தொடங்கவுள்ளது. இதில் அமெரிக்காவின் ஒகினாவில் செயற்படும் கடற்படை விரைவுப் படையும் இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளன.

இந்தத் திட்டம் ரணில் விக்கரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் திட்டமிடப்பட்டது. கடற்படையின் தெற்குக் கட்டளைத் தலைமையகமான தக்ஷினா கடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் மோதல் நடைபெற்றுள்ள நிலையில் அமெரிக்கா இந்த பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்றும் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இதில் ஆயிரம் அமெரிக்கக் கடற்படையினர் பங்கேற்கவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இரு சிறப்பு கப்பல்களில் அமெரிக்கக் கடற்படையினர் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவுள்ளனர்.

கடற்படையினர் சிறப்புப் படகு அணியான எஸ்.பி.எஸ். இதில் முதல் முறையாகப் பங்கேற்கிறது எனத் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்திய அரசு அதிருப்தி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது இந்தியாவை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது.

இந்தியாவின் முன்னணி ஆங்கில ஊடகமான த ஸ்டேட்ஸ்மென் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு,

மிகவும் உணர்ச்சிபூர்வமான காலகட்டத்தில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுக்கான திகதியை தீர்மானிக்கின்ற காலத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்று சிறிலங்காவின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜீவ்காந்தி மற்றும் ஜெயவர்த்தனா இடையேயான 1987 ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த இணைப்பு செல்லாதது என்று இலங்கை உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும் தனித்தனியான மாகாண சபைகளின் கீழேயே தங்களது அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது. (ச-5)

# முகமாலையில் மோதல் சிப்பாய் உயிரிழப்பு

முகமாலை இராணுவ பாதுகாப்பு முன்னரங்கப் பகுதிகள்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர்உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலையடுத்து இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுணதீவு, நாவற்குடாப் பகுதியில் கடமையிலிருந்த இராணுவத்தினர் மீதும் மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ச-5)

# வவுனியா தாக்குதலில் இருஇராணுவத்தினர் பலி

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தாண்டிக்குளத்தில் நேற்றுக் காலை 8.35 மணியளவில் வீதிச்சோதனை நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுகொண்டிருந்த போது இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதனிடையே கொழும்பு-கண்டி பிரதான வீதியில் உள்ள மஹர,கடவத்தை 9 ஆவது கட்டைப் பகுதியில் சக்திவாய்ந்த கிளைமோர் குண்டு நேற்று வியாழக்கிழமை காலை 9.15 மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குப்பைக்குள் மறைத்து இக் குண்டு வைக்கப்பட்டிருந்தது. கணேமுல்லை சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த குண்டு செயலிழக்கச் செய்யும் அணி சம்பவ இடத்துக்கு சென்று கிளைமோரை செயலிழக்கச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நிமலராஜனின் நினைவு நாள் யாழில் நேற்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 6 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடை பெற்றன.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையிலுள்ள நிமலராஜனின் கல்லறையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

அதன் பின்னர் அல்லைப்பிட்டி ,மண்டைதீவுப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து புனித மரியாள் தேவாலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. (எ-1)



காலித் துறைமுகத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது சேதமடைந்த நிலையில் காணப்படும் கப்பலையும் துறைமுகத்தையும் படத்தில் காணலாம்.

# ஆட்லறித் தாக்குதலில் வியாபாரி மரணம்

மிருசுவிலில் தவசிக்குளத்தில் நேற்று முன்தினம் பி.ப. 4.45 மணியளவில் நடத்தப்பட்ட ஆட்லறி தாக்குதலில் வியாபாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பெனடிக் (வயது 59) என்ற வியாபாரியே கொல்லப்பட்டவராவார்.

இடம் பெயர்ந்திருந்த குறித்த வியாபாரி வீடுகளை பார்த்துச் செல்வதற்காக நேற்று முன்தினம் அங்கு சென்று வீட்டு முற்றத்தில் நின்றபோது ஆட்லறி வீழ்ந்து வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற சாவகச்சேரி நீதிவான் பிறேம்சங்கர்,யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மரண விசாரணை,பிரேதபரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-5)

# சண்டிலிப்பாயில் ஆயுதம் மீட்பு

சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று காலை 10.30 மணியளவில் படையினர் நடத்திய தேடுதல் ஒன்றின்போது நிலத்துக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

ரி-56 ரக துப்பாக்கி 4, கைக்குண்டு 4, தொலை இயக்கக்கருவி 1, தொடர்பாடல் தொகுதி 1, சயனைற் வில்லை 1, சிறிய ரக பிஸ்ரலுக்கான வெற்று மகசீன் 1, ரி-56 மற்றும் 9 மி.மி.துப்பாக்கிகளுக்கான ரவைகள் என்பன மீட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-5)

# வவுனியா வாகனங்களுக்கு பாஸ் நடைமுறை அமுல்

வவுனியாவில் பாஸ் அனுமதிமுறை இன்று முதல் அமுலுக்கு வருகிறது. இதன் காரணமாக வவுனியாவில் மற்றும் மன்னார் மாவட்டங்களிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு அனுமதியை பெறவேண்டும். இதற்கான அனுமதிப்பத்திரங்கள் பொலிஸ் நிலையங்களூடாக வழங்கப்படவுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் இவ்வாறான நடைமுறை இருந்த போதிலும் வவுனியாவைச் சேர்ந்த இருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவினால் அம்முறை ரத்துச் செய்யப்பட்டதாக தெரிவித்த இதேவேளை வாகனப் பாஸ் நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்படுவதற்கு எதிர்புத் தெரிவித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். (ச-9)

# சண்டிலிப்பாயில்...

காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மல்லாகம் நீதிவான் சரோஜனி இளங்கோவன் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5,133)

# புத்தூரில் வைத்து...

என தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்று மரணவிசாரணைகளை நடத்திய மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சுவேலிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# பேச்சுவார்த்தை...

நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்தினோம் இதில் வன்முறைகள் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென இணைத் தலைமை நாடுகள் அறிவித்திருந்தமையை சுட்டிக்காட்டி விவாதித்தோம் எனவும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் கூறினார்.

எனினும் களத்தில் அதிகளவு வன்செயல்கள் நடப்பதனால் தாம் கவலை அடைந்துள்ளதாகவும் தெரிவித்த பெளயர் நிலைமைகளைஇன்னும் சுமுகமாக வைத்திருக்க முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.(ச)

# விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள்...

அவசியம் குறித்து சர்வ தேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெளயரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் சட்சியுடன் செய்து கொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இம் மாதம் 28,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெற ஏற்பாடகியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்வதற்காக இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலாளர் ரிச்சர்ட் பெளச்சர் நேற்றுக் காலை அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடினார்.

இச் சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ,ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க,சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பாலித கொஹன்ன மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோதபய ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.இரு நாள் விஜயமாக இலங்கை வந்த அவர் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ச-5)

# ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள்...

கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயருடனான சந்திப்பின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்துள்ளதாவது;

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை அரசினதும் இராணுவத்தினரதும் அத்துமீறல்கள், நடவடிக்கைகள்,எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள போக்குவரத்து பொருளாதார தடைகள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள மனித அவலங்கள் ஆகியவை பற்றி விளக்கினோம்.

ஜெனீவாவில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள சந்திப்புக்கான ஒழுங்குகள் தொடர்பாகவும் இன்றைய சந்திப்பில் எங்களுடன் நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் கலந்துரையாடினார்.

ஜெனீவாப் பேச்சுக்கு கொள்கையளவில் இணக்கத்தை தெரிவித்திருக்கின்றோம். பயணப் பாதுகாப்பு ஒழுங்கு மற்றும் சர்வதேச பாதுகாப்பு ஒழுங்கு ஆகியவை தொடர்பில் உத்தரவாதம் இருந்தால்தான் எமது பேச்சுக் குழு பயணிக்கும் .

பேச்சுக்களில் ஈடுபடுவோர்கள் பற்றியும் பேசப்படும் விடயங்கள் பற்றியும் இன்றைய சந்திப்பில் கலந்துரையாடவில்லை.

எதிர்வரும் நாட்களுக்குள் அது தீர்மானிக்கப்பட்டு நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரியப்படுத்தவுள்ளோம்.

வடக்கு -கிழக்கு இணைப்பு சட்டத்துக்கு விரோதமானது என்று எடுக்கப்பட்டுள்ள புதிய பிரச்சினை தொடர்பிலும் நிலைமைகளை சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

எதிர்வரும் நாட்களுக்குள் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்துத்தான் அடுத்த கட்ட நகர்வுகளையும் தீர்மானங்களையும் தீர்மானிக்கும் என்று நினைக்கின்றேன்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைய ஜெனீவாப் பேச்சுக்களுக்கு இணங்கியிருக்கிறோம். அங்கு மக்களது அவலங்கள் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்துகின்ற ஒரு அரங்காக ஜெனீவாப் பேச்சை நாம் பயன்படுத்த முடிவெடுத்திருக்கிறோம்.

நோர்வேத் தூதுக்குழுவினர் ஒட்டுமொத்தமாக சம்பூர் ,முகமாலை உள்ளிட்ட வலிந்த தாக்குதல்கள் தொடர்பிலும் முக்கியமாக வான் தாக்குதல்கள் தொடர்பான ஒட்டுமொத்தமான தமது கவலையைத் தெரிவித்தார்கள்.

யசூசி அகாசியும் இதேபோன்ற கருத்தையே வெளிப்படுத்தினார். சுவிற்சலாந்து தூதுவரும் அதே கருத்தைத் தெரிவித்திருந்தார்.

தாமும் ஜெனீவாப் பேச்சுக்குத் தயார் என்று அரசு கூறியிருக்கிறது. அச்செய்தியை நோர்வேத்தூதுவர் எடுத்துவந்தார். நாம் கொள்கையளவில் இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கிறோம்.போக்கு வரத்து ஒழுங்குகளும் இனி வரும் களச்சூழல்களும்தான் அதைத் தீர்மானிக்கும்.

ஜெனீவாப் பேச்சில் இணக்கம் காணப்படுகின்ற நடைமுறைப்படுத்தப்படுவது தான் யதார்த்தமாக இருக்கும் என்று நாம் நினைக்கின்றோம்.

நடைபெறப்போகும் பேச்சு ஒரு இறுதிச் சந்தர்ப்பம்.இச் சந்தர்ப்பத்தை தமிழ் மக்களும் தமிழ் மக்களுடைய தலைமையும் சர்வதேச சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

சர்வதேச சமூகம் இதில் ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்து முன்னேற்றகரமாக கொண்டுசெல்ல முயலவேண்டும்.

ஏனெனில் அரசாங்கத்தின் இனப்படுகொலையை கண்டிப்பதுடன் தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும் இனப்படுகொலையையும் கண்டித்து அதற்கான நடவடிக்கைகளை அரசு மீது சர்வதேச சமூகம் எடுக்கின்றபோது அரசாங்கத்தை ஓரளவு வழிக்குக் கொண்டு வரலாம்.

இதனை விடுத்து கண்டிக்கின்றபோக்கில் கண்டன அறிக்கைகளை விட்டுக் கொண்டு இருப்பதனால் எந்தவித பயனும் இல்லை.

எமது மக்கள் மீது நடாத்தப்படும் படுகொலைகளை சர்வதேச சமூகம் கண்டிக்கவில்லை. ஆனால் படைகள் மீது தாக்குதல்கள் நடைபெற்று பின்னடைவுகளைச் சந்திக்கின்றபோது இரு தரப்பும் மோதல்களை நிறுத்த வேண்டும் என்பது போன்றுதான் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை யதார்த்த ரீதியாக விளங்கிக்கொண்டு சர்வதேச சமூகம் நேர்மையான முறையில் நிலைமைகளை அணுகவேண்டும்.

ஜெனீவாப் பேச்சில்கூட இதைத்தான் வலியுறுத்த இருக்கிறோம். பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு அரசாங்கம் ஒரு கால இழுத்தடிப்பை இனியும் செய்யமுடியாது. ஏனெனில் அரசாங்கத்தின் கபடநோக்கத்தை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்திருக்கின்றனர்.

அரசாங்கம் தமிழ் மக்களுடைய வாழ்விடங்களை ஆக்கிரமிப்பதற்கும் தமிழ் மக்களுடைய எதிர்காலத்தை சூனியமாக்குவதற்கும் எப்படி முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் தெளிவாகப்புரிந்து கொண்டிருக்கின்றனர்.

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இந்த ஆக்கிரமிப்பில் இருந்து எமது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான உரிமைப்போராட்டத்தை வென்றெடுப்பதற்காக அணிதிரண்டு கொண்டிருக்கின்றனர்.

இக் கட்டத்தில்தான் நேரடிப்பேச்சுக்கு அரசாங்கம் இணங்கியிருக்கிறது. எமது மக்களின் எதிர்கால நலன்களை இப்பேச்சுக்கள் பாதிக்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றனர் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (எ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.